# கம்பெரலிய

2019


## என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

அரசாங்க வட்டி மானியக் கடன் திட்டம்



நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கௌரவ ரணில் விக்ரமசிங்க
பிரதமர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பெரலிய என்றால் என்ன?

கம்பெரலிய என்பது கிராமிய அபிவிருத்திக்கான புதிய ஒரு சொல்லாகும். கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கிராமிய வாழ்க்கை சிறந்த ஒரு நிலைக்கு மாற்றப்பட்டு மக்கள் வலுப்படுத்தப்பட்டு ஆரோக்கியமான மக்களைக் கொண்ட பலமான ஒரு நாடு உருவாக்கப்படும். இங்கு தற்போதைய அபிவிருத்தியின் கேந்திரஸ்தானமாக நகரம் விளங்குவதற்குப் பதிலாக கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய வலிமை வாய்ந்த அபிவிருத்தியொன்று நாட்டுக்குக் கிடைக்கும். இது ஒரு புதிய அனுபவம். முழு நாடும் மேம்படுத்தப்படும். நகரத்தில் தற்போது இருக்கும் வசதிகள், முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, என்பன கிராமத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படும். ஒரு கிராமத்திலிருந்து மற்றுமொரு கிராமத்தை மாற்றமடையச் செய்யும். நாட்டை மாற்றமடையச் செய்யும் பாரிய ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கம்பெரலிய ஊடாக கிராமத்திற்குள் ஏற்படும் மாற்றங்கள்

# எமது விவசாயம்

இலங்கை பூராவும் கிராமங்களில் கைவிடப்பட்ட பல ஆயிரம் வருடங்கள் பழமையான நீர்ப்பாசன விவசாயத்தை முன்னிலைப்படுத்திய பாரிய நீர் வளங்களின் வலையமைப்பு ஒன்று உள்ளது. பண்டைய மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட பெரிய, சிறிய குளங்கள் 30,000 இற்கும் அதிகமானவை எமது சிறிய நாட்டில் உள்ளன. இருந்தாலும் இதுவரை சில உடைந்தும் சில கைவிடப்பட்ட நிலையிலும் உள்ளன. கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ஆயிரக்கணக்கான குளங்களை புனரமைத்து, அவற்றை தண்ணீரால் நிரப்பி கிராமிய விவசாயத்தை மீண்டும் மேம்படுத்தி, எமக்கு பழக்கமான, நாம் அறிந்த பயிர்களினால் நிரம்பிய, தன்னிறைவு கொண்ட ஏற்றுமதியை நோக்கிய விவசாயப் பொருளாதாரமொன்றை ஏற்படுத்துவோம். அத்துடன் கைவிடப்பட்ட பயிரிடாத வயல்களில் மீண்டும் விதை விதைக்கவும், அணைக்கட்டுகள் மற்றும் நீர்பாசனத் திட்டங்களை அமைக்கவும் கம்பெரலிய ஊடாக நிதி ஒதுக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பெரலிய ஊடாக கிராமத்திற்குள் ஏற்படும் மாற்றங்கள்

# கல்வி கற்ற, ஆரோக்கியமான சிறுவர் சந்ததியொன்று

நாடொன்று அபிவிருத்தி அடைவது என்பது அந் நாட்டின் மக்கள் கல்வி கற்ற, ஆரோக்கியமான செயற்பாட்டு நிலையை அடைவதாகும். கம்பெரலிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நாம் கிராமத்தை சேர்ந்த எமது பிள்ளைகளுக்கு ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிகாட்டும் சுகாதார வசதிகள், பாடசாலை குடி நீர் வசதிகள், மலசலகூட வசதிகள் போன்றவற்றை கம்பெரலிய ஊடாக நாம் செய்து கொடுப்போம். அவர்களது வளர்ச்சியுறும் சரீர வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகளுக்கான விளையாட்டு மைதானங்களை அமைத்து கொடுக்கின்றோம். எமது சின்னஞ் சிறு பிள்ளைகளுக்கு காலையும், மாலையும் விளையாட பாடசாலையிலும், கிராமத்திலும் சிறுவர் பூங்காக்களை அமைத்துக் கொடுப்போம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கம்பெரலிய ஊடாக கிராமத்திற்குள் ஏற்படும் மாற்றங்கள்

# கிராமத்தையும் நகரத்தையும் ஒன்றிணைத்தல்

கம்பெரலிய ஊடாக நிர்மாணிக்கப்படும் கிராம வீதி, வடிகால்கள் காரணமாக நகரத்திலிருந்து கிராமத்துக்கும், கிராமத்திலிருந்து நகரத்துக்குமான போக்குவரத்து துரிதப்படுத்தப்படும். கிராமத்து மரங்களில், தோட்டங்களில் வளரும் விவசாயப் பயிர்களைச் சந்தைக்கு கொண்டு வர, நகரத்தில் கொள்வனவு செய்யும் பொருட்களை கிராமத்துக்கு கொண்டு செல்ல இலகுவான போக்குவரத்துக் கட்டமைப்பு உருவாக்கப்படும். இதனூடாக கிராமிய அபிவிருத்தி துரிதப்படுத்தப்படும். கிராமமும், நகரமும் ஒரே வளர்ச்சியுடன், ஒரே எழுச்சியுடன் மாற்றமின்றி முன்நோக்கி செல்லும்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கம்பெரலிய ஊடாக கிராமத்திற்குள் ஏற்படும் மாற்றங்கள்

# நல்லிணக்கமும் சமாதானமும் நிறைந்த கிராமம்

கம்பெரலிய ஊடாக கிராமங்களில் கைவிடப்பட்ட, எவராலும் கவனிக்கப்படாமல் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் விகாரைகள் ஆகியற்றை புனரமைத்துக் கொடுத்து கிராமத்தில் சமாதானமான சமய கலாசாரத்துக்கு புத்துயிர் அளிக்கப்படும். மன அமைதிக்காக காலையும், மாலையும் சமய வழிபாடுகளில் ஈடுபடும் மக்களுக்கு கம்பெரலிய ஊடாக அழகான, தூய்மையான சமய ஸ்தலம் கிடைக்கும். சமாதானமும் நல்லிணக்கமும் கொண்ட நாட்டில் அபிவிருத்தியை அடைவது கடினமல்ல. கம்பெரலிய ஊடாக கிராமத்தில் சமய ரீதியான சூழல் ஒன்றும் மீண்டும் உருவாக்கப்படும். அதுதவிர மின்சாரமற்ற சமய வழிபாட்டு ஸ்தலங்களுக்கு சூரிய மின் கட்டமைப்பு ஊடாக மின்சார விநியோகமும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கம்பெரலிய ஊடாக கிராமத்திற்குள் ஏற்படும் மாற்றங்கள்

# தூய்மையான நாடு புதிய நகரம்

கம்பெரலிய கிராமத்தை மட்டுமல்ல நகரத்தையும் முன்னேற்ற உதவுகின்றது. தூய்மையற்ற, துர்நாற்றம் நிறைந்த கழிவு குழாய் கட்டமைப்பை தூய்மையாக்க கம்பெரலிய ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்றது. நகர வடிகால் கட்டமைப்பை தூய்மையாக்கவும் கம்பெரலிய ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்றது. இதன்மூலம் தண்ணீர் நன்றாக வடிந்தோடும், கரப்பான்பூச்சிகள், காகங்கள் இல்லாத தூய்மையான நகரம் அமைக்கப்பட்டு ஆரோக்கியமான சூழல் உருவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பெரலிய ஊடாக கிராமத்திற்குள் ஏற்படும் மாற்றங்கள்

# மேம்படுத்தப்பட்ட சமூகம்

வறுமையை தனிமையாக எதிர்கொள்ளும் திராணியற்றவர்களும், வீட்டுக்கு கூரை அமைத்துக் கொள்ள முடியாதவர்களும், இரவு நேரத்தில் வெளிச்சத்தைப் பெற முடியாமல் மின்சார வசதியின்றி பல குடும்பங்கள் அசௌகரியத்துடன் உள்ளன. கம்பெரலிய அவர்களது வாழ்க்கையை ஒளிமயமானதாக்கிக் கொள்ளவும், இரவு நேரத்தில் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான மின்சாரத்தையும், மழை, காற்றிலிருந்து வீட்டை பாதுகாக்க அவர்களுக்கு கூரையையும் வழங்குகின்றது. கம்பெரலிய புதிய செயற்திட்டத்துக்கு அமைய கூரைக்கு மட்டுமல்ல, அயலவரின் ஒத்துழைப்போடு முழு வீட்டையும் செய்து முடிப்பதற்கு வளங்களை வழங்குகின்றது. அதேபோல் கிராமத்து மக்களுக்கு வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்க வீதியோரத்தில் அதிக சனநெரிசல் கொண்ட சந்தைக்குப் பதிலாக கூரை கொண்டதும், பொருட்களை சீராக வைத்துக் கொள்ள கூடியதுமான அழகான வாராந்த சந்தையை அமைக்கவும் நிதி ஒதுக்கியுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பெரலிய செயற்திட்டத்தில் உள்ளடங்கும் துறைகள் மற்றும் நிதி பங்கீடுகள்

| செயற்திட்டம் | ஒரு செயற்திட்டத்துக்கு ஒதுக்கப்படக்கூடிய அதிகூடிய நிதி (ரூபா) |
|---|---|
| 01. குளம் மற்றும் அணைக்கட்டு புனரமைப்பு | 40 இலட்சம் |
| 02. பாதை, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு | |
| ▪ கிராமிய வீதி அபிவிருத்தி | 20 இலட்சம் |
| ▪ நகரத்தின் ஒடுக்கமான பாதை அபிவிருத்தி | 20 இலட்சம் |
| 03. சிறிய பாலங்கள் நிர்மாணம் | 30 இலட்சம் |
| 04. பாடசாலை துப்பரவேற்பாட்டு வசதிகள் | |
| ▪ பாடசாலை மலசலகூடம். மலசலகூட புனரமைப்பு செய்தல் | 01 இலட்சம் |
| ▪ பாடசாலை மலசலகூடம். மலசலகூடம் புதிதாக கட்டுவதற்கு | 10 இலட்சம் |
| 05. விளையாட்டுத்துறை உட்கட்டமைப்பு மேம்பாடு | |
| ▪ விளையாட்டு மைதானம் மற்றும் வசதிகள் மேம்பாடு | 20 இலட்சம் |
| 06. ஏனைய சமுதாய பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி | |
| ▪ நகரத்துறை வடிகாலமைப்பு வசதி மேம்பாடு | 10 இலட்சம் |
| ▪ விவசாயத்திற்கான சிறியளவு நீர் வழங்கல் திட்டம் | 10 இலட்சம் |
| ▪ குடிநீருக்கான சிறியளவு நீர் வழங்கல் திட்டம் | 10 இலட்சம் |
| 07. வாராந்த சந்தை அபிவிருத்தி | 20 இலட்சம் |
| 08. சிறுவர் பூங்கா புனரமைப்பு | 30 இலட்சம் |
| 09. மின்சாரமற்ற குடும்பங்களுக்கான மின்சார வசதி (ஒரு வீட்டுக்கான மின்கம்பிகளை பொருத்துதல், மின்சாரத்தை வழங்குதல்) | ரூ.30,000 |
| 10. சமய ஸ்தல புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் | 10 இலட்சம் |
| 11. சமய ஸ்தலங்களுக்கான சூரிய சக்தி மின்சார வசதியை வழங்கல் (விபரத்துக்கு அட்டவணையை பார்க்கவும்) | 05 இலட்சம் |
| 12. தற்காலிக கூரையை நிரந்தர கூரையாக மாற்றல் (செலவின வரையறைக்குள் சமுதாயப் பங்களிப்புடன் தற்காலிய வீடொன்றை நிரந்தர வீடொன்றாக மாற்றுவதும் ஏற்புடையதாகும்) | 03 இலட்சம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பெரலிய நாடு முழுவதும் செயற்படும் விதம்

கம்பெரலிய செயற்படுத்தப்படும்போது அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு தேர்தல் தொகுதிக்கு ரூ.300 மில்லியன் வீதம் அனைத்து தேர்தல் தொகுதிகளுக்கும் ரூ.48.000 மில்லியன் இவ்வருடத்தில் ஒதுக்கப்படுகின்றது.

## கம்பெரலிய முன்மொழிவுகளை முன்வைத்தல், செயற்படுத்துதல் மற்றும் பின்னணி

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சில், அமைந்துள்ள கம்பெரலிய தொடர்பாடல் செயலாளர் அலுவலகத்துக்கு கிடைக்கும் கம்பெரலிய முன்மொழிவுகள், தேவையான அடிப்படை தகைமைகளை கொண்டிருக்கின்றது என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பப்படும்.

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு குறித்த முன்மொழிவுக்கான நிதி, மாவட்ட செயலகத்தால் விடுவிக்கப்படும். மாவட்ட செயலக அலுவலகம் மற்றும் பிரதேச செயலக அலுவலகம் ஊடாக கம்பெரலிய செயற்திட்டம் செயற்படுத்தப்படும்.

அவ்வாறு செயற்படுத்தப்படும் செயற்திட்டத்தின் மாதாந்த தேர்ச்சி மதிப்பீடுகள் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புடன் இடம்பெறும். செயற்திட்டம் நிறைவடைந்த பின்னர் மாவட்டச் செயலகத்தின் ஊடாக தேவையான நிதிக் கொடுப்பனவுகளுக்காக திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு கோரிக்கை விடுக்கப்படும். அதேபோல் பௌதீக மற்றும் நிதி மதிப்பீடுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் திறைசேரியில் பட்டியல்கள் பரிசோதனைப்படுத்தப்பட்டு தேவையான நிதி விடுவிக்கப்படும்.

கம்பெரலிய துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அனைத்து அபிவிருத்தி செயற்திட்டங்களும் 2019.08.31 இற்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டும்.

குறித்த செயற்திட்டங்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளையும் 2019.09.30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதற்கு மாவட்ட செயலக அலுவலகம் மற்றும் பிரதேச செயலகம் பொறுப்பேற்றல் வேண்டும்.

## கம்பெரலிய அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் ஊடாக செயற்திட்ட செயற்பாடுகள் கவனிக்கப்பட்டு, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் கூடுதலான அனுகூலங்கள் கிடைக்கும் வகையில், வெளிப்படையாகவும் சிறந்த தரத்தை கொண்டதாகவும் சிறந்த முறையில் அனைத்து செயற்திட்டங்களையும் நிறைவு செய்து மக்களின் நன்மைக்காக கையளிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 ஆம் ஆண்டு கம்பெரலிய ஊடாக செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் பல





மூதத்தவ வாவி - ரஸ்நாயக்கபுர







ப/இரணவில - சமிதுகம இரண்டாம் குறுக்கு வீதி







மருதபுரம் - குறுக்கு வீதி மீள்நிர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 ஆம் ஆண்டு கம்பெரலிய ஊடாக செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் பல



முன்



பின்

மஹ உஸ்வெவ விகாரை - ஆனமடுவ



முன்



பின்

சங்கானை - பெரியபுலவு அரசடி ஞானவைரவர் ஆலய புனரமைப்பு



முன்



பின்

சங்கானை - அராலி தெற்கு கலாவதுறை அரசடி சிவன் கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2018 ஆம் ஆண்டு கம்பெரலிய ஊடாக செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் பல



முன்



பின்

தெல்லிப்பளை - நகுலேஸ்வர வித்தியாலய விளையாட்டு மைதானம்



முன்



பின்

ப/இரணவில கனிஷ்ட வித்தியாலயம்




முன்



பின்

பருதல்பொல - தல்வில வெல்ல கனிஷ்ட வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

## அரசாங்க வட்டி மானியக் கடன் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

இலங்கையில் தற்போது அண்ணளவாக 230,000 தொழில்தருநர்கள் அதாவது வியாபார உரிமையாளர்கள் உள்ளனர். இது வேலை செய்பவர்களின் எண்ணிக்கையில் 2.8% ஆகும். துரிதமாக முன்னேறி வரும் நாடுகளான வியட்நாமில் அது 19.6% என்பதுடன் தாய்லாந்தில் 27.5% என்ற உயர்ந்த எண்ணிக்கையாகும். அதிக மக்களை கொண்ட பங்களாதேஷ் மற்றும் சீனாவில் இந்த எண்ணிக்கை முறையே 11.6% மற்றும் 7.5% ஆக உள்ளது. இலங்கையின் சனத்தொகைக்கு சமமான சனத்தொகை கொண்ட நாடுகளில் கூட இந்த எண்ணிக்கை 10% ஆக நிலையானதாக உள்ளது. உலக பொருளாதாரத்துடன் போட்டியிடுவதற்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கும் தொழில்முயற்சியாளர்களின் வீதத்தை அதிகரிக்க வேண்டும்.

அதற்கமைய, V2025 என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக குறைந்தபட்சம் புதிய தொழில்முயற்சியாளர்கள் 100,000 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட உள்ளனர். தற்போது தொழில்முயற்சித் துறையில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு தமது வியாபார நடவடிக்கைகளை தொடர்ந்தும் விஸ்தரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனூடாக இலங்கையை ஏற்றுமதி வர்த்தகத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதாரத்தை நோக்கி கொண்டு செல்வதற்கு தேவையான பலம் கொண்ட தொழில்முயற்சியாளர்களை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா செயற்திட்டம்" ஊடாக நிதி மற்றும் நிதியல்லாத வசதிகளை வழங்கும் முன்மொழிவுத் திட்டங்கள் 21 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. "ரன் அஸ்வென்ன" கடனுதவித் திட்டம்
2. "கொவி நவோதா" கடனுதவித் திட்டம்
3. "ரிய சக்தி" கடனுதவித் திட்டம்
4. "சிட்டி ரைட்" கடனுதவித் திட்டம்
5. "மினி டெக்ஸி" கடனுதவித் திட்டம்
6. "ரிவி பல சவி" கடனுதவித் திட்டம்
7. "திரி சவிய" கடனுதவித் திட்டம்
8. "ஜய இசுர" கடனுதவித் திட்டம்
9. "சொந்துரு பியச" கடனுதவித் திட்டம்
10. "மாத்ய அருண" கடனுதவித் திட்டம்
11. "சிஷ்ய" கடனுதவித் திட்டம் (வட்டியற்ற)
12. "எரம்பும" கடனுதவித் திட்டம்
13. "பசுமைக் கடன்" கடனுதவித் திட்டம்
14. "விகசித்த நிவாச" கடனுதவித் திட்டம் (நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கு)
15. "ரெக்கவரன" கடனுதவித் திட்டம்
16. "ரட்டவிரு உபஹார" கடனுதவித் திட்டம்
17. கூரையின் மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உருவாக்கல் கருத்திட்ட கடனுதவித் திட்டம் (RSGPLoC)
18. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடனுதவித் திட்டம் (SMELoC)
19. "பவித்ர கங்கா" கடனுதவித் திட்டம்
20. தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI)
21. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களை அமைப்பதற்கான கடன் திட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. வட்டி மானிய கடன் திட்டம்

## 1.1 ரன் அஸ்வென்ன கடனுதவித் திட்டம்

**முதலாவது குழு**

| | |
|---|---|
| பயனாளிகள் | - சிறிய அளவிலான விவசாயிகள், கமநல நிறுவனங்கள், அலங்கார மலர்களைப் பயிரிடுவோர், அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலில் ஈடுபடும் வியாபாரிகள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 5,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

**இரண்டாம் குழு**

| | |
|---|---|
| பயனாளிகள் | - விவசாய உற்பத்திப் மற்றும் மீன் பதனிடும் நிறுவனங்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 300,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

**மூன்றாம் குழு**

| | |
|---|---|
| பயனாளிகள் | - வர்த்தக அளவிலான விவசாயப் பண்ணைகள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 750,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, ஹெட்டன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, பேன் ஏஷியா வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, கார்கில்ஸ் வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதி வங்கி, யூனியன் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அமானா வங்கி |

## 1.2 கொவி நவோதா கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - சிறிய அளவிலான விவசாயிகள், கமநல நிறுவனங்கள் (விவசாய நடவடிக்கைகளை இயந்திரமயமாக்கல்) |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 500,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.46% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, ஹெட்டன் நெஷனல் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, பேன் ஏஷியா வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அமானா வங்கி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 ரிய சக்தி கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - பாடசாலை சிற்றூர்திகளின் (வான்களின்) உரிமையாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 4,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.46% |
| மீளச் செலுத்தும் காலம் | - 5 வருடங்கள் |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

## 1.4 "சிட்டி ரைட்" கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - தற்போதுள்ள பழைய பஸ் வண்டிக்கு பதிலாக சொகுசு பஸ் வண்டியொன்றை கொள்வனவு செய்ய விரும்பும் தனியார் பஸ் உரிமையாளர்கள்<br>தமது ஊழியர்களுக்கு போக்குவரத்து சேவையை வழங்க விரும்பும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 10,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.46% |
| மீளச் செலுத்தும் காலம் | - 5 வருடங்கள் (1வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

## 1.5 "மினி டெக்ஸி" கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - தமக்கு உரிய முச்சக்கர வண்டி ஊடாக தொழில் செய்பவர்கள் இதற்கு தகுதி பெறுவார்கள். தற்போதைய முச்சக்கர வண்டியை பாவனையிலிருந்து நிறுத்திவிட்டு, சிறிய கார் ஒன்றை கொள்வனவு செய்ய வேண்டும். 35 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 2,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.48% |
| மீளச் செலுத்தும் காலம் | - 5 வருடங்கள் |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

## 1.6 ரிவி பல சவி கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - சூரிய மின் கட்டமைப்பை பொருத்துவதற்கு எதிர்பார்க்கும் தனியார் வீட்டு உரிமையாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 350,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 5 வருடங்கள் |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, ஹெட்டன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, பேன் ஏஷியா வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அமானா வங்கி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 1.7 திரி சவிய கடனுதவித் திட்டம்

### முதலாவது குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - கோழி இறைச்சி உற்பத்தித் தயாரிப்பாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 50,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.5% |
| மானிய வட்டி வீதம் | - 100% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 0% |
| மீளச் செலுத்தும் காலம் | - 4 வருடங்கள் (3 மாத சலுகைக் காலம்) |

### இரண்டாம் குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - சுயதொழிலாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 1,000,000 |
| மானிய வட்டி வீதம் | - 13.86% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

### மூன்றாம் குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - கால்நடையில் ஈடுபடும் தொழில்முயற்சியாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 5,000,000 |
| மானிய வட்டி வீதம் | - 13.86% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி |

## 1.8 ஜய இசுர கடனுதவித் திட்டம்

### முதலாம் குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - வருடாந்த விற்பனை ரூபா. 10 மில்லியனுக்கும், ரூபா. 250 மில்லியனுக்கும் இடையிலும், ஊழியர்களின் எண்ணிக்கை 5 இற்கும் 50 இற்கும் இடையிலும், உள்ள விவசாயத் துறையான கடற்றொழில், கால்நடைகள், அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம் மற்றும் மென் பொறியியல், அச்சிடல், சுற்றுலா கைவினைப் பொருட்கள், தச்சுவேலை, ஆடைகள், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 100,000,000 (ஏற்றுமதி) 50,000,000 (ஏற்றுமதியல்லாத) |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

### இரண்டாம் குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - வருடாந்த விற்பனை ரூபா. 250 மில்லியனுக்கும், ரூபா. 750 மில்லியனுக்கும் இடையிலும், ஊழியர்களின் எண்ணிக்கை 51 இற்கும் 300 இற்கும் இடையிலும், உள்ள விவசாயத் துறையான கடற்றொழில், கால்நடைகள், அலங்கார மலர்ச்செய்கை, வீட்டுத் தோட்டம் மற்றும் மென் பொறியியல், அச்சிடல், சுற்றுலா கைவினைப் பொருட்கள், தச்சுவேலை, ஆடைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 400,000,000 (ஏற்றுமதி) 200,000,000 (ஏற்றுமதியல்லாத) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 25% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 10.40% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, பேன் ஏஷியா வங்கி, கார்கில்ஸ் வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதி வங்கி, நேஷன் ட்ரஸ்ட் வங்கி, யூனியன் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அமானா வங்கி |

## 1.9 சொந்துரு பியச கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - தமது வீடுகளை விஸ்தரிக்க அல்லது முழுமைப்படுத்த எதிர்பார்ப்பவர்கள். 1500 சதுர அடிக்கு குறைந்த வீட்டு உரிமையாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 200,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் அதி கூடிய காலம் | - 7 வருடங்கள் |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி |

## 1.10 மாத்ய அருண கடனுதவித் திட்டம்

### முதலாம் குழு (ஊடக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு)

| | |
|---|---|
| பயனாளிகள் | - பதிவு செய்துள்ள ஊடகவியலாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 300,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 100% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 0% |
| மீளச் செலுத்தும் காலம் | - 5 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

### இரண்டாம் குழு (ஊடக உபகரணங்களை புதுப்பிப்பதற்கு)

| | |
|---|---|
| பயனாளிகள் | - பதிவு செய்துள்ள ஊடகவியலாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 150,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 5 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம்) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

## 1.11 "சிஷ்ய" கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - உயர்தர பரீட்சை சித்தியடைந்தவர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 800,000 (வருடத்துக்கு 2 இலட்சம் வீதம் 4 வருடங்கள்) |
| மானிய வட்டி வீதம் | - 100% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 0 |
| மீளச் செலுத்தும் காலம் | - 12 வருடங்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 1.12 "எரம்புமு" கடன் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - பட்டதாரி இளைஞர்கள், தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ) 5,6 மற்றும் 7 நிலை சான்றிதழ் கொண்டவர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 1,500,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 12% |
| மானிய வட்டி வீதம் | - 100% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 0% |
| ஏனைய வசதிகள் | - அரசாங்கத்தின் முழுப் பொறுப்பு |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

## 1.13 பசுமைக் கடனுதவித் திட்டம்

**முதலாம் குழு**

| | |
|---|---|
| பயனாளிகள் | - உக்கிப்போகக் கூடிய மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் பொருட்களை உற்பத்தி செய்வோர், சிறிய அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் சேதன உரத்தினை தயாரிப்போர். * முச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் (முச்சக்கர வண்டிகளில் மீட்டர் பொருத்துவதற்காக அதிகபட்ச தொகை 20,000) |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 1,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.93% |
| மீளச் செலுத்தும் காலம் | - 10 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |

**இரண்டாம் குழு – "ஹோம்ஸ்டே" (Homestay) நிகழ்ச்சித்திட்டம்**

| | |
|---|---|
| பயனாளிகள் | - சிறு சுற்றுலா விருந்தோம்பல் வீடுகளை நடத்திச் செல்பவர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 5,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 50%ஐ விட அதிகமான |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6% |
| மீளச் செலுத்தும் காலம் | - 10 வருடங்கள் (1 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஸ்ரீ லங்கா சேமிப்பு வங்கி, லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, பேன் ஏஷியா வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதி வங்கி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அமானா வங்கி |

## 1.14 "விக்கசித்த" கடனுதவித் திட்டம்

பயனாளிகள் - நடுத்தர வருமான வீடமைப்பு திட்டத்திற்கான பயனாளிகள்

- தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி சபை அல்லது வேறு தனியார் வீடமைப்பு திட்டம் ஊடாக முதற்தடவையாக வீடொன்றை கொள்வனவு செய்தல்
- தனியார் வீடமைப்பு திட்டங்களை மேற்கொள்பவரிடம் முதற் தடவையாக வீடொன்றை கொள்வனவு செய்பவர்களுக்கு
- முதற்தடவையாக தனி வீடொன்றை கொள்வனவு செய்பவர்களுக்கு
- தமது தனிப்பட்ட பாவனைக்காக தமது காணியில் முதற்தடவையாக வீடொன்றை அமைக்கவுள்ள (வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முழுயையான வீட்டை முற்றாக அகற்றிவிட்டு, மீண்டும் கட்டுவது உள்ளடங்கலாக) சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு

| | |
|---|---|
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 5,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 12% (முதல் 5 வருடங்களுக்கு) |
| மானிய வட்டி வீதம் | - 40% (முதல் 5 வருடங்களுக்கு) |
| கடன்பட்டோரால் செலுத்த வேண்டிய வட்டி வீதம் | - 7% (மானியம் வழங்கப்படுவது முதல் 5 வருடங்களுக்கு மட்டும்) |
| மீளச் செலுத்தும் அதி கூடிய காலம் | - 25 வருடங்கள் |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - தேசிய சேமிப்பு வங்கி |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## 1.15 "ரெக்கவரன" கடனுதவித் திட்டம்

### முதலாம் குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - சிறுவர் பராமிப்பு நிலையமொன்றை நடத்திச் செல்ல எதிர்பார்க்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - ஒரு நிலையத்துக்கு ரூ. 3,500,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.46% |
| மீளச் செலுத்தும் காலம் | - சலுகைக் காலம் உள்ளடங்கலாக 7 வருடங்கள் தேசிய தொழிற் பயற்சி (NVQ) சான்றிதழ் கொண்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். மகளிர் மற்றும் சிறுவர் அமைச்சு ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கான தேசிய வழிகாட்டல்களுக்கு அமைய அந்த நிலையத்தை நடத்திச் செல்ல வேண்டும். |

### இரண்டாம் குழு

| | |
|---|---|
| பயனாளிகள் | - வயோதிப பாதுகாப்பு நிலையங்களை புதிதாக அமைப்பதற்கு மற்றும் புனரமைப்பு செய்வதற்கு விரும்பும் தனியார் துறை முதலீட்டாளர்களுக்கு |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 10,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.46% |
| மீளச் செலுத்தும் காலம் | - 7 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) தேசிய தொழிற் பயற்சி சான்றிதழ் கொண்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இந்த பாதுகாப்பு நிலையம் SLS 1506 2015 இற்கு அமைய நடத்திச் செல்ல வேண்டும். (வயோதிப பாதுகாப்பு நிலையத்துக்காக இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் நிர்ணயித்துள்ள இலங்கையின் தரக்கட்டுப்பாடு) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

## 1.16 "ரட்டவிரு உபஹார" கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்த வெளிநாட்டு முகவர் நிறுவனங்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 10,000,000 |
| வருடாந்த வினைத்திறனான வட்டி வீதம் | - 13.86% |
| மானிய வட்டி வீதம் | - 75% |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 3.46% |
| மீளச் செலுத்தும் காலம் | - 15 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) கடன் பெறுவதற்கு தகுதியை பெற குறித்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மாதாந்தம் பண வைப்பீடொன்றை தாம் கடன் பெறவுள்ள உள்ளூர் வங்கியில் வைப்பிலிட வேண்டும். |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2. வெளிநாட்டுக் கடன் உதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கடன் நிகழ்ச்சித் திட்டங்கள்

### 2.1 கூரையின் மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உருவாக்கல் கருத்திட்டம் (RSPGLoC) (ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்படும்)

**முதலாம் குழு**

| | |
|---|---|
| பயனாளிகள் | - தனியார் வீடுகள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - உயர்ந்த பட்ச கொள்ளளவு 50 KV |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 8% |
| மீளச் செலுத்தும் காலம் | - 10 வருடங்கள் |

**இரண்டாம் குழு**

| | |
|---|---|
| பயனாளிகள் | - தொழில்முயற்சியாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - உயர்ந்த பட்ச கொள்ளளவு 50 KV |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 8% |
| வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் | - ஆசிய அபிவிருத்தி வங்கி (முதலாவது தடவைக்கான நிறுவனம் ஐஅடொ 50 மில்லியன் மற்றும் முன்னேற்றச் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஐஅடொ 200 மில்லியன் வரை அதிகரித்தல்) |
| மீளச் செலுத்தும் காலம் | - 10 வருடங்கள் (6 மாத கால சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, செலான் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, கொமர்ஷல் வங்கி, நேஷன் ட்ரஸ்ட் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி |

### 2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடனுதவித் திட்டம் (SMELoC)

| | |
|---|---|
| பயனாளிகள் | - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 50,000,000 |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 11 – 14% |
| வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் | - ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐஅடொ 175 மில்லியன்) |
| மீளச் செலுத்தும் காலம் | - 10 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக) |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்ஷல் வங்கி, செலான் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, சம்பத் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, நேஷன் ட்ரஸ்ட், தேசிய அபிவிருத்தி வங்கி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2.3 "பவித்ர கங்கா" கடனுதவித் திட்டம்

| | |
|---|---|
| பயனாளிகள் | - ஏற்கனவே களனி கங்கைக்கும், களப்புகளுக்கும் தமது கழிவுப்பொருட்களை வெளியேற்றும் கம்பனிகள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - 30,000,000 |
| கடன்பட்டோரால் செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் | - 6.5% |
| வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் | - ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் |
| மீளச் செலுத்தும் காலம் | - 10 வருடங்கள் (2 வருட சலுகைக் காலம் |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, ஹெட்டன் நெஷனல் வங்கி, செலான் வங்கி, சம்பத் வங்கி, கொமர்ஷல் வங்கி, டி.எப்.சி.சி. வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, லங்கா ஓரிக்ஸ் லீசிங், நிறுவனம், பீபல்ஸ் லீசிங் வங்கி |

# 3. நிதி மற்றும் நிதியல்லாத உதவி நிகழ்ச்சித் திட்டங்கள்

## 3.1 தேசிய கடன் உத்தரவாத நிறுவனம் (NCGI)

| | |
|---|---|
| பயனாளிகள் | - சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் |
| அதிக பட்ச கடன் தொகை (ரூபா) | - மொத்தக் கடன் தொகையில் 2/3 |
| வருடாந்த தவணை | - 1 - 2% |
| வெளிநாட்டுக் கடன் வழங்கும் நிறுவனம் | - ஆசிய அபிவிருத்தி வங்கி (ஐஅடொ 100 மில்லியன்) |

## 3.2 சிறிய அளவிலான நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கான ஆதரவை வழங்கல்

| | |
|---|---|
| பயனாளிகள் | - இளைஞர்கள், யுவதிகள், பெண்கள், விவசாயிகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கம்பனிகளை ஸ்தாபிப்பதற்கு அக்கறை செலுத்தும் நபர்கள் |
| நிதியல்லாத நன்மைகள் | - கம்பனிகளை ஸ்தாபிப்பதற்கான தொழில்நுட்ப உதவி, புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல், நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாடல், சந்தைக்குள் பிரவேசித்தல் |
| நிதிசார் நன்மைகள் | - அரச வங்கிகளின் ஊடாக குத்தகை வசதிகள் மற்றும் 75% குத்தகைச் செலவு அரசாங்கத்தினால் செலுத்தப்படும். "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையிலான கடன் |

**அரச சலுகை**

| | |
|---|---|
| சிறு மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்கள் | - கடன் தவணை மற்றும் வட்டி அடங்கலாக மாதாந்த கடன் தவணையில் 75% |
| மகளிர் தலைமையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் | - கடன் தவணை மற்றும் வட்டி அடங்கலாக மாதாந்த கடன் தவணையில் 85% |
| மாற்றுத் திறன் கொண்டவர்கள் தலைமையில் செயற்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கம்பனிகள் | - கடன் தவணை மற்றும் வட்டி அடங்கலாக மாதாந்த கடன் தவணையில் 90% |
| பங்குபெறும் நிதி நிறுவனங்கள் | - இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் பெறுபவர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை குறைப்பதற்காக "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து கடன் திட்டங்களுக்கும் குறைந்த படிமுறைகளை கொண்ட செயற்பாட்டு மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த செயற்திட்ட உள்ளடக்கத்தின் ஒவ்வொரு குழுவின் கீழும் கடன் பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் குறைந்த மற்றும் எளிமையான நடைமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

1. **வட்டிச் சலுகைக் கடன் திட்டம்** (ரன் அஸ்வென்ன, "சிட்டி ரைட்" கடனுதவித் திட்டம், "மினி டெக்ஸி" கடனுதவித் திட்டம், கொவி நவோதா, ரிய சக்தி, ஜய இசுர, பசுமை கடன், திரி சவிய, நகர பஸ் சேவைக்கான கடன், வாடகை வண்டி சேவைக்கான கடன், நடுத்தர வருமான வீடமைப்புத் திட்டக் கடன்)

   **படிமுறை 01** - கடன் பெறுநரால் தான் விரும்பும் வங்கியின் (அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டிலும்) அருகிலுள்ள கிளைக்கு சென்று "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" சேவை முகப்பில் அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியை சந்தித்து கடன் விண்ணப்பபத்திரம் மற்றும் தேவையான ஏனைய தகவல்களை பெறல்.

   **படிமுறை 02** - கடன் பெறுநரால் தான் விரும்பும் வங்கியின் அருகிலுள்ள கிளைக்கு சென்று "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" சேவை முகப்பில் அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் பூர்த்திசெய்யப்பட்ட கடன் விண்ணப்பபத்திரம் மற்றும் தேவையான ஏனைய தகவல்களை கையளித்தல்.

   **படிமுறை 03** - கடன் விண்ணப்பம் / செயற்திட்ட மதிப்பீடுகளின் பின்னர் குறித்த வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உப கடன் மற்றும் ஏனைய ஆவணங்கள், வட்டிச் சலுகை கடனுக்காக பதிவு செய்ய அபிவிருத்தி நிதி திணைக்களத்துக்கு கையளிக்க வேண்டும்.

   **படிமுறை 04** - அபிவிருத்தி நிதி திணைக்களம் பதிவு செய்த கடிதத்தை, கடன் பெறுவதற்காக குறித்த வங்கிக்கு விநியோகிக்கும் (3 வேலை நாட்களுக்குள்)

   **படிமுறை 05** - பதிவு செய்த கடிதம் கிடைத்தவுடன் வட்டிச் சலுகை வீதத்துக்கு அமைய வங்கியால் குறித்த விண்ணப்பதாரிக்கு கடன் வழங்கப்படும்.

2. **வெளிநாட்டு நிதியுதவி மீள் நிதி கடன் திட்டம்** (சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்கள், (SMELoC) கூரையின் மீது பொருத்தப்படும் சூரிய மின் கட்டமைப்பு கடன் (RSPGLoC))

   **படிமுறை 01** - கடன் பெறுநரால் தான் விரும்பும் வங்கியின் (அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டிலும்) அருகிலுள்ள கிளைக்கு சென்று கடன் விண்ணப்பத்திரம் மற்றும் தேவையான ஏனைய தகவல்களை பெறல்.

   **படிமுறை 02** - கடன் பெறுநரால் தான் விரும்பும் வங்கியின் அருகிலுள்ள கிளைக்கு சென்று கடன் விண்ணப்பத்திரம் மற்றும் தேவையான ஏனைய தகவல்களை கையளித்து கடன் கோருதல்.

   **படிமுறை 03** - ஆரம்ப மதிப்பீடுகளின் பின்னர் வங்கியின் ஆரம்ப அனுமதியை பெறுவதற்காக கடன் விண்ணப்பத்துடன் குறித்த ஆவணங்களை அபிவிருத்தி நிதி திணைக்களத்துக்கு கையளித்தல்.

   **படிமுறை 04** - அபிவிருத்தி நிதி திணைக்களத்திடம் கையளித்த ஆவணங்களை மதிப்பீடுகளுக்கு உட்படுத்தி, உப செயற்திட்டத்தின் தகுதியை உறுதிப்படுத்திய பின்னர், கடன் தொகையை வழங்க அனுமதி வழங்கல்.

   **படிமுறை 05** - வங்கி தமது நிதியை பயன்படுத்தி, வங்கியின் வட்டி வீதத்துக்கு அமைய விண்ணப்பதாரிக்கு கடன் வழங்கல்.

   **படிமுறை 06** - வங்கி ஊடாக மறு நிதி கடன் விண்ணப்பத்தை அபிவிருத்தி நிதி திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல் மற்றும் 3 வேலை நாட்களுக்குள் அபிவிருத்தி நிதி திணைக்களம் உப செயற்திட்டங்களுக்கான நிதியை வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 07 - மீள் நிதி கடன் கிடைத்த திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் வட்டி வீதம், வட்டிச் சலுகை கடன் வீதமாக மாற்றமடையும்.

## 3. ஏனைய விசேட கடன் திட்டங்கள்

### 3.1 "எரம்பும" கடனுதவித் திட்டம்

படிமுறை 01 - ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஊடாக தேசிய பத்திரிகைகள் மற்றும் அவர்களது இணையத்தளங்கள் ஊடாக விளம்பரங்கள் பிரசுரிப்பதன் மூலம் இளம் பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) 5,6 மற்றும் 7 நிலை சான்றிதழ்களைப் பெற்றவர்களிடம் திட்டங்களை கோருதல்.

படிமுறை 02 - தகுதி பெற்ற இளம் பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) சான்றிதழ் பெற்றவர்கள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய வங்கிகளின் எந்தவொரு கிளையிலும் அல்லது இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்கலாம்.

படிமுறை 03 - தகுதி பெற்ற இளம் பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) சான்றிதழ் பெற்றவர்களது விண்ணப்பங்கள் வங்கி கிளை முகாமையாளர்கள் / ஏற்றுமதி அபிவிருத்தி சபை பிரிவு குழுவினர் ஊடாக மதிப்பீடுகள் மேற்கொண்டு சாத்தியமான திட்டங்களை தேர்ந்தெடுத்தல்.

படிமுறை 04 - தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்திட்டங்கள் கடன் வசதிகளை வழங்குவதற்காக கவனத்தில் கொள்வதற்காக குறித்த வங்கிகளுக்கு சிபாரிசு செய்யப்படும்.

படிமுறை 05 - இளம் பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) சான்றிதழ் பெற்றவர்கள் ஊடாக தேவை ஏற்படின், குறித்த ஆவணங்களை வங்கியில் கையளித்தல்.

படிமுறை 06 - தகுதி பெற்ற இளம் பட்டதாரி தொழில்முயற்சியாளர்கள் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி தகைமைகள் (NVQ) சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசாங்கத்தின் உத்தரவாதத்துக்கு அமைய வங்கிகள் ஊடாக நிதி நிலைத்தன்மையை உறுதிப்படுத்தி கடன் வழங்கல்.

### 3.2 சிறு மற்றும் நடுத்தர அளவு வியாபார நிறுவனங்கள் ஸ்தாபித்தல்

படிமுறை 01 - தொழில்நுட்ப ஆலோசகர்களின் ஒத்துழைப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில் மாவட்ட செயலாளர் ஊடாக தலைமைத்துவம் வழங்கும் குழு ஊடாக அந்த மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறைந்தபட்சம் 5 உறுப்பினர்களை கொண்ட சாத்தியக் குழுவை நியமித்தல்.

படிமுறை 02 - அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஆலோசகர்களால் கம்பனி சட்டம் அல்லது கட்டளை சட்டத்தின் கீழ் நிறுவனமாக அல்லது சங்கமாக அதனை பதிவு செய்தல்.

படிமுறை 03 - ஆலோசகர்கள் மற்றும் வங்கிகளின் ஒத்துழைப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து குழுக்களுக்கும் அவர்களது வியாபார அபிப்பிராயங்களை முன்வைத்து வியாபார முன்மொழிவுத் திட்டம் அமைத்தல்.

படிமுறை 04 - குறித்த மாவட்ட செயலாளரின் சிபாரிசுடன் வியாபார முன்மொழிவுத் திட்டம் மற்றும் ஏனைய ஆவணங்களை பதிவுசெய்த நிறுவனம் அல்லது சங்கம் தாம் விரும்பும் வங்கியிடம் சமர்ப்பிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிமுறை 05 - குறித்த வங்கியால் நிதி சாத்தியத் தன்மை கொண்ட குழுவுக்கு கடன் வழங்கல்.

### 3.3 "சொந்துரு பியச" கடனுதவித் திட்டம்

படிமுறை 01 - கடன் பெறுபவரால் தேசிய வீடமைப்பு அதிகார சபையிடமிருந்து விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளல்.

படிமுறை 02 - தேசிய அடையாள அட்டை பிரதியுடன், பூர்த்தி செய்யப்பட்ட கடன் விண்ணபத்திரத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபையிடம் விண்ணப்பதாரி கையளிக்க வேண்டும்.

படிமுறை 03 - தேசிய வீடமைப்பு அதிகார சபையானது கடன் வழங்கும் மதிப்பீடுகளை மேற்கொண்டு இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று வங்கிகளில் கடன் பெறுபவர் விரும்பும் வங்கிக்கு அதனை அனுப்புதல்.

படிமுறை 04 - வங்கியால் விண்ணப்பதாரியை மதிப்பிடுதல் மற்றும் குறித்த வீட்டை பரிசோதனை செய்தல் மற்றும் பதிவு செய்வதற்காக கடன் விண்ணப்பத்தை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிடம் கையளித்தல்.

படிமுறை 05 - விண்ணப்பதாரியால் ஆரம்ப நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால், நிதி மற்றும் வெகுசன அமைச்சு ஊடாக விண்ணப்பதாரியை பதிவு செய்தல் மற்றும் பதிவு செய்த விண்ணப்பத்தை வங்கிக்கு அனுப்புதல்.

படிமுறை 06 - இரண்டு தவணைகளில் கடன் தொகை வழங்கப்படும்.

### 3.4 "பசுமை கடன்" - சுற்றுலா விருந்தோம்பல் வீட்டு (Homestay) கடனுதவி திட்டம்

படிமுறை 01 - கடன் பெறுநரால் தான் விரும்பும் வங்கியின் அருகிலுள்ள கிளைக்கு சென்று "என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா" சேவை முகப்பில் அல்லது அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரியை சந்தித்து கடன் விண்ணப்பபத்திரம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பதிவு செய்யும் விண்ணப்பம் மற்றும் ஏனைய தேவையான தகவல்களை பெறல்.

படிமுறை 02 - கடன் பெறுநரால் சுற்றுலா விருந்தோம்பல் வீடாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்வதற்காக உரிய முறையில் பூர்த்தி செய்த விண்ணப்பபத்திரத்தையும் ஏனைய ஆவணங்களையும் குறித்த வங்கி ஊடாகவோ அல்லது பதிவுத் தபாலில் நேரடியாகவோ இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுப்ப முடியும்.

படிமுறை 03 - விண்ணப்பதாரி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கோரிக்கைகளை நிறைவேற்றியிருந்தால், அந்த அதிகார சபையால் விண்ணப்பம் கிடைத்த திகதியிலிருந்து ஏழு வேலை நாட்களுக்குள் அனுமதி வழங்கும் கடிதத்தை விண்ணப்பதாரிக்கான பிரதி ஒன்றுடன் குறித்த வங்கிக்கு அனுப்புதல்.

படிமுறை 04 - வங்கி ஊடாக கடன் விண்ணப்பபத்திரம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி கடிதம் மற்றும் ஏனைய ஆவணங்கள், சலுகைக் கடனுக்காக பதிவு செய்வதற்கு அபிவிருத்தி நிதி திணைக்களத்துக்கு அனுப்பப்படும்.

படிமுறை 05 - அபிவிருத்தி நிதி திணைக்களம் ஊடாக பதிவுசெய்த கடிதத்தை, கடன் வழங்குவதற்காக குறித்த வங்கிக்கு கையளிக்கும் (3 வேலை நாட்களுக்குள்)

படிமுறை 06 - பதிவு செய்த கடிதம் கிடைத்தவுடன் துரிதமாக சலுகைக் கடன் வட்டி வீதத்தின் கீழ் வங்கி ஊடாக விண்ணப்பதாரிக்கு கடன் தொகை வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா

அரசாங்க வட்டி மானியக் கடன் திட்டம்

## கம்பெரலிய

அபிவிருத்தி யுத்தம்

# ஸ்ரீ லங்காவை தொழில் முனைவின் சொர்க்கபுரி ஆக்குவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொடர்பு சேவை

☎ 1925

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org